DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.8/2025

**prosecution witness: LW5– as PW–5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முகம்மது தாரிக் அமீன் | தொழில் | : | சார்பு ஆய்வாளர் |
| த/பெ. | : | அகமது சித்திக் | வயது | : | 38 |
| கிராமம் | : | பெருங்குளம் | சமயம் | : | முஸ்லிம் |
| தாலுகா | : | இராமநாதபுரம் | | | |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

<u>07.08.2025</u>

( 1 முதல் 8 எதிரிகள் சிறப்பு முகாமில் இருந்து ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்,)

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் ஆற்றங்கரை கடற்கரை கா.நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.10.2023 ம் தேதி காலை மண்டபம் கடற்கரை கா.நிலைய குற்ற எண் 31/2023 சட்டபிரிவுகள் 14(c) Foreigner Act r/w 3(a), 6(a) Passport Rules 1950 வழக்கில் இராமேஸ்வரம் கா. ஆய்வாளர் அவர்களால் கைது செய்யப்பட்டு இராமேஸ்வரம் நீதித்துறை நடுவர் நீதிபதி அவர்களால் நீதிமன்ற காவல் அடைப்பு பெற்று இலங்கை நாட்டை சேர்ந்த 8 நபர்களை ஆய்வாளர் அவர்கள் உத்தரவுப்படி நானும் மண்டபம் கடற்கரை கா.நிலைய சார்பு ஆய்வாளர் யாசர் மௌலானா , வாலிநோக்கம் கா.நிலைய கடற்கரை கா.நிலைய சார்பு ஆய்வாளர் பெருமாள், மற்றும் போலீஸ் பார்ட்டி சகிதம் இராமநாதபுரம் மாவட்ட ஆயுதபடை வாகனத்தில் உத்தரவுப்படி சென்னை புழல் மத்திய சிறை நீதிமன்றக்காவலுக்கு உட்படுத்தியபோது எதிரி அந்தோணி ரக்ஷன் பெர்னாண்டோ என்பவரை திரேக பரிசோதனை செய்த சிறைத்துறை அதிகாரி எதிரிக்கு இடதுகையில் வீக்க காயம் ஏற்பட்டுள்ளதாகவும் அதனால் மேற்படி நபரை சென்னை ஸ்டான்லி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்புமாறு கூறியதின்பேரில் மேற்படி நபரை சென்னை ஸ்டான்லி மருத்துவமனை மருத்துவர் முன்பு ஆஜர் செய்தபோது மேற்படி அந்தோணி ரக்ஷன் என்பவர் தன்னை மண்டபம் இந்திய கடலோர காவல் படை தனுஷ்கோடி கடல் அருகே பிடித்து விசாரணை செய்தபோது மேற்படி காயம் ஏற்பட்டதாக தெரிவித்தார். அவருக்கு சிகிச்சை அளித்து தகுதி சான்றிதழ் பெற்று மீண்டும் சென்னை புழல் மத்திய சிறையில் நீதிமன்றக்காவலுக்கு 26.10.2023 ம் தேதி உட்படுத்தினோம். இது சம்பந்தமாக

காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்திய கடலோர காவல் படையினர் எதிரியை வலுக்கட்டாயமாக பிடித்ததானால்தான் இந்த காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அவ்வாறு எனது வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் தவறு. கடலோர காவல் நிலைய ஆய்வாளர் திரு.கணகராஜ் என்பவர் மட்டும்தான் என்னை விசாரித்தார் வேறு யாரும் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். புழல் சிறைச்சாலையில் 26.10.2023ம் தேதி எத்தனை மணிக்கு எதிரியை ஆஜர் செய்தீர்கள் என்றால் சுமார் காலை 10.00 மணி. 27.10.2023ம் தேதியன்று மாவட்ட ஆயுதப்படை அலுவலகத்தில் மதியம் சுமார் 2.00 மணிக்கு வாகனத்தை ஒப்படைத்தோம். அதன் பின்பு எனது ஆற்றாங்கரை கடற்கரை கா.நிலையத்திற்கு உட்பட்டபகுதியில் பணியில் இருந்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு நேரடியாக எந்த விபரமும் தெரியாது என்றால் சரிதான்.

SUJITH Digitally signed by SUJITH Date: 2025.08.07 18:15:45 +0530